தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றம் – மன்ற உறுப்பினர் குழுவை மாற்றியமைத்தல் .

**ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மஅதி.1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.51** **நாள்: 18.6.2009.**

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண். 117, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மஅதி.1) துறை, நாள் 14.9.2006.
2. அரசு ஆணை (நிலை) எண். 118, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மஅதி.1) துறை, நாள் 11.7.2008.

------

**ஆணை:**

படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்டத்தைக் கண்காணிக்கவும் மற்றும் அதன் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும் தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றம் ஒன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைத்து ஆணையிடப்பட்டது. அக்குழுவில் 10 அலுவல் சார் உறுப்பினர்களும் 15 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

2. படிக்கப்பட்ட அரசாணை இரண்டில் தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தின் அலுவல் சார் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களை மாற்றி அமைத்து அரசு ஆணையிட்டது.

3. தற்போது நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தினை மாற்றியமைக்க முடிவு செய்து பின்வருவோரை அலுவலர் சார் உறுப்பினர்கள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமித்து அரசு ஆணையிடுகிறது.

**<u>அலுவல் சார் உறுப்பினர்கள்</u>**

1. தலைமைச் செயலாளர்
   (தலைவர் இல்லாத போது குழுமத்தில் தலைவராக பணியாற்றுவார்)
2. முதன்மைச் செயலாளர்,
   ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை / உறுப்பினர்– செயலாளர் மற்றும் அமைப்பாளர்
3. முதன்மைச் செயலாளர், நிதித் துறை
4. முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை
5. முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை
6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்

**<u>அலுவல் சாரா உறுப்பினர்கள்</u>**

**<u>நாடாளுமன்ற உறுப்பினர்கள்</u>**

1. திரு. ஆதி சங்கர் – கள்ளக்குறிச்சி
2. திரு. ஈ.ஜி. சுகவனம் – கிருஷ்ணகிரி

**<u>சட்டமன்ற உறுப்பினர்கள்</u>**

1. டாக்டர் திருமதி கே. காயத்ரிதேவி – மதுராந்தகம்
2. திரு. எஸ். குணசேகரன் – சிவகங்கை

**மாவட்ட ஊராட்சித் தலைவர்**

திருமதி அஜிதா மனோ தங்கராஜ் – கன்னியாகுமரி

**ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்கள்**

1. திருமதி பா.சாந்தி – கடலூர் ஊராட்சி ஒன்றியம், கடலூர் மாவட்டம்
2. திருமதி பி. சரஸ்வதி – க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கரூர் மாவட்டம்

**கிராம ஊராட்சித் தலைவர்கள்**

1. திரு. பி.செல்வகணேசன் – செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி, திண்டுக்கல் மாவட்டம்
2. திரு. ஆர். நாராயணன் – குட்டப்பட்டி ஊராட்சி, சேலம் மாவட்டம்
3. திரு என். தேவராஜன் – சின்னியம்பாளையம் ஊராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்
4. திரு. சு. திலகராஜ் – டி. கரிசல்குளம் ஊராட்சி, விருதுநகர் மாவட்டம்
5. திரு. இரா. இராஜன் – மாத்தூர் ஊராட்சி, விழுப்புரம் மாவட்டம்
6. திருமதி . ஆர். பாலமணி – திருப்பராய்த்துறை ஊராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்

**(6) தொழிலாளர் மற்றும் நலிவுற்றோருக்கான அமைப்புகள் (இரண்டு)**

1. பத்மஸ்ரீ கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்,
   லாப்டி (உழவனின் நில உரிமை இயக்கம்), நாகப்பட்டினம்

2. செயலாளர், காந்திகிராமம் அறக்கட்டளை, அம்பாதுரை,
   திண்டுக்கல் மாவட்டம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.